-

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**

IN THE COURT OF : Sessions Court for trial of Communal Clash Cases in Southern Districts, Madurai.

Case No : **CC.No. 156/2018**

Prosecution witness : 1

| | |
|---|---|
| Name: வேலுச்சாமி | Caste: |
| Father'sName: | Calling: |
| Village: | Religion: |
| Taluk: | Age: |

Accused present.

**Solemnly affirmed in accordance with the provision of Act X of** 1873 **on the day of** 05.11.2025

**முதல் விசாரணை**:

நான் தற்போது காவல்துறையில் இருந்து ஓய்வு பெற்று திருமங்கலத்தில் வசித்து வருகிறேன். கடந்த 14.07.2016ம் தேதி மதுரை மாநகர், அவணியாபுரம் காவல்நிலையத்தில் சிறப்பு சார்பு ஆய்வாளராக பணியில் இருந்தபோது அப்போதைய காவல் ஆய்வாளர்-திரு.நல்லு, சார்பு ஆய்வாளர்-திரு.ஜெயராஜ்ஆகியோருடன் ரோந்து சென்றபோது தகவலின் பேரில் காலை 11.00 மணிக்கு வெள்ளக்கல் பேருந்துநிறுத்தத்தில் கண்காணித்தபோது தங்கப்பெருமாள் என்ற பின்னால் பெயர், விலாசம் கேட்டு தெரிந்த நபர் தனது கையில் தங்கமீனாட்சி ஜுவல்லர்ஸ் என்று எழுதப்பட்ட கட்டைப்பையுடன் நின்றிருந்தவர் எங்களை கண்டு ஓட எத்தனித்தவரை பிடித்து விசாரிக்க ஆய்வாளர் அவர்கள் மேற்படி நபரை பார்த்து தங்களிடம் சட்ட விரோதமான போதைப்பொருள் இருப்பதாக சந்தேகப்படுகிறேன். தங்களை சோதனை செய்ய அருகில் நீதித்துறை நடுவரிடம் அழைத்து செல்லவா அல்லது நானே சோதனையிடவா என்று கேட்டபோது மேற்படி நபர் தாங்களே சோதனை செய்யலாம் என்று சொல்லி 11.30 மணிக்கு கொடுத்த சோதனை சம்மத கடிதத்தை பெற்று, அவர் ஆஜர் செய்த கட்டைப்பையை சோதனையிட அதில் சுமார் 5கிராம் எடையுள்ள 300கஞ்சா பொட்டலங்கள் இருப்பது

கண்டுபிடிக்கப்பட்டது. மேற்படி எதிரியை கைது செய்தும், அந்த கஞ்சா பொட்டலங்களில் 290 கட்டைப்பையுடன் தனியாகவும், மீதிப்பொட்டலங்களை தனியாகவும் காக்கி பேப்பரில் பொட்டலம் போட்டு போலீஸ்பட்டன் சீல் வைத்தோம். எதிரி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை ஆய்வாளர் அவர்கள் பதிவு செய்தார்கள். மேற்படி அத்தாட்சியில் நானும், சார்பு ஆய்வாளர்-ஜெயராஜ் அவர்களும் சாட்சிகையெழுத்து போட்டோம். எதிரியுடன் 13.00 மணிக்கு நிலையம் வந்து எதிரி மீது குற்றஎண். 1448/2016, ச/பி.8(c)r/w20(b)(ii)B NDPS ACTன் படி வழக்கு பதிவு செய்ய நான் உதவியாக இருந்தேன். ஆய்வாளர் என்னை விசாரித்தார். **அத்தாட்சி அ.சா.ஆ.1** ஆகும்.

**குறுக்கு விசாரணை**

எதிரி ஆஜர். சந்தர்ப்பம் அளித்தும் குறுக்கு விசாரணை செய்யவில்லை